# குற்றச் சம்பவங்கள் பூஜ்யமாக இருக்க அர்ப்பணிப்புடன் பணியாற்றுங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி




நேற்று முன்தினம் (23.8.2024) சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் காவல் துறையின் சார்பில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் பதக்கங்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழாவில், சிறப்பாக பணியாற்றியதற்காக பதக்கங்களை பெற்றவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

நெறிகளைப் பின்பற்றி அல்லும் பகலும் உழைத்தால், அவர்கள் போற்றப்படுவார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. உங்கள் கடமையை நீங்கள் செய்தால், அதற்கான பாராட்டும் பலனும் உங்களை தேடி வந்து சேரும். அதற்கு எடுத்துக்காட்டுதான் இந்த விழா.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்தே நம்முடைய சென்னை காவல்துறை மிகச் சிறப்பான காவல் துறையாக இருந்து வந்தாலும்,

1970ஆம் ஆண்டு காவல்துறையை நவீனமயம் ஆக்கியவர், அந்தப் பணியை மிகச் சிறப்பாக செய்தவர் அன்றைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். இதை தமிழ்நாடு காவல்துறை ஐ.ஜி.ஆக அந்தக் காலத்தில் இருந்த மரியாதைக்குரிய எப்.வி. அருள் அவர்களே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்.

காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக இந்தியாவிலேயே முதல் காவல் ஆணையத்தை அமைத்தவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதன் பிறகுதான், ஒன்றிய அளவில் காவல்துறையை நவீனமயமாக்கும் பணிகள் தொடங்கியது. இரண்டாவது மூன்றாவது காவல் ஆணையத்தையும் கலைஞர் அவர்கள்தான் அமைத்தார். ஐந்தாவது காவல் ஆணையத்தை சென்னை உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் சி.டி. செல்வம் தலைமையில் திராவிட மாடல் அரசு அமைத்திருக்கிறது. மக்களைப் பாதுகாக்கும் காவலர்களை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை!

அந்த அடிப்படையில்தான், இந்த ஆணையத்தை அமைத்து காவலர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுத்து வருகிறோம். காவல்துறையை மேலும் நவீனமயமாக்கி வருகிறோம். கடந்த மூன்றாண்டு காலத்தில் காவல் துறையின் உட்கட்டமைப்பை வலுப்படுத்தவும், காவல் துறையை நவீனமயமாக்கவும், காவலர் நலனைப் பாதுகாக்கவும் பல்வேறு சாதனைகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

**மகளிர் காவலர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்!**

காவல் துறையில் முதன்முதலாக மகளிரை இடம்பெறச் செய்தது தலைவர் கலைஞர் அவர்கள்தான். இன்று எனக்கு அளிக்கப்பட்ட அணிவகுப்பு மரியாதை கமாண்டாராக ஒரு பெண் அதிகாரி இருந்து அந்த காட்சியை நீங்கள் பார்த்தீர்கள். அது எனக்கு மிகவும் இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருக்கிறது. மகளிர் பொன்விழா ஆண்டான இப்போது, மகளிர் காவலர்களிடையே நீண்ட நாட்களாக இருக்கும் ஒரு கோரிக்கையை மிகுந்த மகிழ்ச்சியோடும் மனைநிறைவோடும், இந்த நிகழ்ச்சியில் அறிவிப்பாக நான் வெளியிட விரும்புகிறேன்.

தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரியும் பெண் காவலர்களுக்கு ஒரு ஆண்டு மகப்பேறு விடுமுறை அளிக்கப்படுகிறது. இந்த விடுமுறை முடிந்து, அவர்கள் பணிக்கு திரும்பும்போது அவர்கள் குழந்தைகளை பராமரிப்பதில் பல சிரமங்கள் ஏற்படுவது தொடர்பாக தொடர்ந்து அவர்கள் கோரிக்கை வைத்து வருகிறார்கள்.

**சைபர் குற்றங்களை குறைப்பதற்கு பெண் காவலர்களுக்கு சிறப்புப் பயிற்சி!**

அவர்கள் கோரிக்கையை ஏற்று, மகப்பேறு விடுமுறையில் இருந்து பணிக்குத் திரும்பும் பெண் காவலர்களுக்கு, அவர்கள் பணிமூப்புக்கு விலக்களித்து, அவர்களுடைய பெற்றோர்களோ அல்லது கணவர் வீட்டைச் சார்ந்தவர்களோ வசிக்கும் மாவட்டங்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பணிமாறுதல் வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகளை பாதிக்கும் குற்றச்செயல் பிரச்சனைகளை தீர்ப்பதில் நம்முடைய பெண்காவலர்கள் மிக முக்கிய பங்காற்றுகிறார்கள்.

## காவல் துறையை நவீனப்படுத்த இந்தியாவிலேயே முதல் காவல் ஆணையத்தை அமைத்தவர் கலைஞர்!

எனவே, இப்படிப்பட்ட குற்றங்களை கையாளுவதில் பெண் காவலர்களின் தொழில்முறைத் திறன்களை மேலும் மேம்படுத்தும் வகையில், பெண் கடத்தல் குற்றங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றங்களை விசாரித்து தீர்ப்பதற்கு அவர்களுக்கு சிறப்புத் திறன் பயிற்சி அளிக்கப்படும்.

உங்களுக்கு இருக்கும் கடமையும், பொறுப்பும் மிக மிகப் பெரியது. மக்களைக் காப்பாற்றுவது உங்கள் கடமை! மக்களை பாதுகாப்பது உங்கள் பொறுப்பு! அதை எந்தக் குறையும் இல்லாமல் நீங்கள் நிறைவேற்றி தாருங்கள் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**குற்றங்கள் நடத்தப்படுவதற்கு முன்பே தடுக்கும் துறையாக செயல்பட வேண்டும்!**

குற்றங்களை குறைக்கும் துறையாக மட்டும் இல்லாமல், குற்றங்கள் நடப்பதற்கு முன்பே தடுக்கும் துறையாக செயல்பட வேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். குற்றங்கள் நடக்காத மாநிலமாக போதைப் பொருள் நடமாட்டம் இல்லாத மாநிலமாக பாலியல் குற்றம் இல்லாத மாநிலமாக நம்முடைய மாநிலம் உருவாக வேண்டும்.

குற்றங்கள் எங்கேயும் யாராலும் நடக்கக் கூடாது. மீறி நடந்தால், உடனடியாக குற்றவாளி கைது செய்யப்பட்டாக வேண்டும். சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு விரைவாக தண்டனையை பெற்றுத் தந்தாக வேண்டும். இந்த உறுதிமொழியை நான் மட்டும் எடுத்தால் போதாது காவல்துறையின் உயரதிகாரிகள் மட்டும் எடுத்தால் போதாது ஒவ்வொரு காவலரும் எடுத்தாக வேண்டும். "என்னுடைய காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் எந்த வகைப்பட்ட குற்றமும் நடக்கவில்லை நடக்க விடமாட்டேன்" என்று ஒரு காவலர் முடிவெடுத்து விட்டால் குற்றங்கள் பூஜ்ஜியத்திற்கு வந்துவிடும்.

மனித வளர்ச்சியின் அனைத்துக் குறியீடுகளிலும் முன்னணி மாநிலமாக இருக்கும் தமிழ்நாடு குற்றச் சம்பவங்களில் பூஜ்ஜியமாக இருந்தால்தான், நமக்கெல்லாம் பெருமை. இதில் பூஜ்ஜியம் வாங்க 100 விழுக்காடு அர்ப்பணிப்புடன், அனைத்துக் காவலர்களும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டு, விருது பெற்ற அனைவரையும் பாராட்டி, மகிழ்ந்து வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

# கோவை மாநகர் மாவட்டத்தில் வட்டம் - பகுதி வாரியாக கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!

*கோவை, ஆக. 25-*

*முதலமைச்சர், கழக தலைவர், தளபதி அவர்கள் தலைமையில் கடந்த 16.08.2024 அன்று நடைப்பெற்ற மாவட்டச் செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப, கழக தலைவர், தளபதி அவர்களால் அறிவிக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டிற்கான சட்டசபை தேர்தலின் தி,மு,க, ஒருங்கிணைப்பு குழுவினர் அமைச்சர் கே.என்.நேரு, ஆர்.எஸ். பாரதி, அமைச்சர் எ.வ. வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோரின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை மற்றும் மாவட்டப் பொறுப்பாளர் அமைச்சர் சு.முத்துசாமியின் வழிகாட்டுதலில், 19.08.2024 அன்று தி.மு.க. செயற்குழுக் கூட்டம், கோவை, மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வட்டங்கள் தோறும் வட்டக் கழக கூட்டங்கள், 16 பகுதி கழக பொது உறுப்பினர் கூட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.*

*1. வட்ட கழகங்களிலும், பகுதி கழகங்களிலும் கூட்டங்கள் நடைபெறும் பொழுது அந்தந்த வட்டங்களுக்கு, பகுதிகளுக்கு உட்பட்ட இடங்களில் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.*

*2. பகுதி கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், கூட்டம் நடைபெறும் இடம், நாள், தேதி, நேரம் போன்றவற்றை முறையாக அச்சிட்டு சுற்றறிக்கை மூலம் அப்பகுதி தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பகுதி நிர்வாகிகள், வார்டு நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2, பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக செயல் வீரர்கள் மற்றும் கழக பொது உறுப்பினர்கள் என அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும்.*

*3. ஒவ்வொரு வட்டங்களிலும், கழக உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப அனைத்து கழக நிர்வாகிகள், உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கை அளித்து தகவல் தெரிவிக்கவும்.*

*4. மேற்காணும் நடைமுறைகளை பின்பற்றி வட்டக் கழக செயலாளர்கள், பகுதி கழக செயலாளர்கள் பொது உறுப்பினர் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.*



**சிங்காநல்லூர் தொகுதி**,

*சிங்காநல்லூர் பகுதி2க்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம் வார்டு எண்- 54 27.08.2024 மாலை 6.30 மணி சக்கர செட்டியார் மண்டபம்*

*வார்டு எண்- 60 26.08.2024 மாலை 6.00 மணி உப்பிலிபாளையம் லட்சுமி ஹால்*

*பீளமேடு பகுதி 2க்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம்*

*வார்டு எண் 28 25.8.2024 காலை 9.00 மணி தெற்கு வீதி,மன்றம் அருகில்*

*வார்டு எண் - 48 25.8.2024 காலை 10.00 மணி நந்தகோபால் வீதி*

*வார்டு எண் - 49 25.8.2024 காலை 11.00 மணி நியூ ஸ்கீம் ரோடு, காய்கடை அருகில்*

*பீளமேடு பகுதி3க்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம்*

*வார்டு எண் 53 25.8.2024 மாலை 5.30 மணி மகாலட்சுமி கோவில் மண்டபம், மசக்காளி பாளையம்*

**தெற்கு தொகுதி**

*காந்திபுரம் பகுதிக்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம்*

*வார்டு எண் 67 29.08.2024 மாலை 6.00 மணி மாவட்ட கழக அலுவலகம்*

*வார்டு எண் - 68 28.08.2024 மாலை 6.00 மணி மாவட்ட கழக அலுவலகம்*

*ராமநாதபுரம் பகுதிக்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம்*

*வார்டு எண் 63 25.08.2024 காலை 10.00 மணி கலைஞர் தமிழ்மன்றம்*

*வார்டு எண் - 64 25.08.2024 காலை 11.00 மணி வட்ட கழக அலுவலகம்*

*வார்டு எண் - 66 25.08.2024 மாலை 6.00 மணி புனித அந்தோணியார் திருமண மண்டபம்*

*பெரிய கடை வீதி பகுதி1க்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம்*

*வார்டு எண் 69 01.09.2024 மாலை 4.00 மணி கன்னட நாயக்கர் வாலிபர் சங்க மண்டபம்*

*வார்டு எண் - 70 01.09.2024 மாலை 5.00 மணி அமுதசுரபி ஹால்*

*வார்டு எண் - 81 01.09.2024 மாலை 6.00 மணி சமுதாய கூடம், காமராஜபுரம்*

**வடக்கு தொகுதி**

*கணபதி பகுதிக்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம்*

*வார்டு எண் 29 25.08. 2024 மாலை 5 மணி கணபதிபுதூர் உடன்பிறப்பு மன்றம் அருகில்*

*வார்டு எண் 47 25.08. 2024 மாலை 6 மணி கிளை அலுவலகம் அருகில் ஜீவானந்தம் ரோடு ரத்தினபுரி*

*மணியகாரன்பாளையம் பகுதிக்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம்*

*வார்டு எண் 19 25.08.2024 மாலை 4.00 மணி KPR திருமண மண்டபம், மணியகாரன் பாளையம்*

*வேலாண்டி பாளையம் பகுதிக்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம்*

*வார்டு எண் 42 01.09. 2024 மாலை 5.00 மணி வட்ட அலுவலகம்*

*வார்டு எண் 43 01.09. 2024 காலை 1130 மணி பேராசிரியர் நற்பணி மன்றம்*

*வார்டு எண் 44 01.09. 2024 காலை 1030 மணி அண்ணா நகர் சமுதாய கூடம் மற்ற பகுதிகளின் சுற்றறிக்கை பட்டியல் தயார் செய்து தெரிவிக்குமாறு பகுதி கழக செயலாளர்கள் மற்றும் வட்டக் கழக செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.*

*கோவை மாநகர் மாவட்டத்தின் பிற வட்டங்கள், பகுதிகளில் நடைபெறவிருக்கும் கூட்ட விபரங்கள் தொடர்ந்து அறிவிக்கப்படும்.*

*அந்தந்த தொகுதி, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள் மற்றும் கழக பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

---

### தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு

# மாவட்ட நிர்வாகிகள் நியமனம்!

### சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அணி தலைவராக நியமிக்கப்பட்ட எம்.எஸ்.அக்பர்அலி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **எம்.ஏ.எம். இம்தியாஸ்** (சின்னையா செட்டியார் வீதி, கீரனூர், புதுக்கோட்டை மாவட்டம் - 622 502) அவர்கள் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவுதலைவராக நியமிக்கப்படுகிறார்.

**இராமநாதபுரம் மாவட்டம்**

இராமநாதபுரம் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அணி துணைத் தலைவராக திரு. **செ.முகம்மது இக்பால்**, (10/11, கோசுராவுத்தர் தெரு, முதுகுளத்தூர், இராமநாதபுரம் மாவட்டம் - 623 704) அவர்களும்;

மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவுதுணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட மு. அப்துல்ஜலில் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **செ.இஸ்ஹாக்**, (9/131, தெற்குத் தெரு, ஏர்வாடி, இராமநாதபுரம் மாவட்டம் - 623 515) அவர்கள் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவுதுணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அணி நிர்வாகிகளுடன் இணைந்து இவர்கள் கழகப் பணியாற்றுவார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.08.2024

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்,
தி.மு.க. சிறுபான்மையினர்
நல உரிமைப்பிரிவு

